# நேசரின் ஒளி

# Nesarin Oli

மலர் 5 | இதழ் 5 | இலவசப்பிரதி | ஜனவரி 2018
Volume 5 | Issue 5 | Free Distribution | January 2018




Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்

# முகவுரை

## இந்த வருடத்தின் வாக்குத்தத்தம்

## நீ என்னுடையவன் ஏசாயா 43:1

கிறிஸ்துவுக்குள் அருமையான தேவபிள்ளைகளே, இந்த புதிய ஆண்டில் உங்களை பத்திரிக்கையின் மூலமாக சந்திக்க கிருபை செய்த தேவனை கோடானகோடி ஸ்தோத்திரத்துடன் ஆரம்பிக்கிறேன். எத்தனையோ பேருக்கு இல்லாத பெரிய பாக்கியம் தேவன் நமக்கு தந்துள்ளார். கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணிப்போல பாதுகாத்தார். அவருடைய வசனத்தை அனுப்பி போதித்து நடத்துகிறார். அவருடைய இரத்தகோட்டைக்குள் நம்மையும் நம் குடும்பங்களையும் நம் திருச்சபையையும் அவர் நமக்குத் தந்த எல்லா ஊழியங்களையும் செய்ய கிருபை கொடுத்தார். அவருடைய அபிஷேகத்தை நமக்குள் அளவில்லாமல் ஊற்றி நம்மை நடத்தினார்.

இந்த புதிய ஆண்டிலும், நம் இரட்சகரான மீட்பர், இந்த உலகத்தை உண்டாக்கினவர் நம்மைப் பார்த்து **"நீ என்னுடையவன்"** என்ற ஆசீர்வாதமான வார்த்தையை தந்திருக்கிறார். நம்மை அவருடையவர்களாக மாற்றியிருக்கிறார். அப்படியானால் எல்லாவற்றையும் அருளாமல் இருப்பாரா? பயப்படாதே, தேவனுடைய ஆசீர்வாதம் நமக்கு உண்டு.

இந்த ஆண்டிலும் ஒரு சில பொருத்தனைகளுடன் நாம் கடந்து போவோம். நீங்கள் செய்யவேண்டிய பொருத்தனைகள் - 'நான் தினந்தோறும் கர்த்தரை தேடுவேன். தினந்தோறும் ஜெபிப்பேன். ஸ்தோத்திரப்பலி செலுத்துவேன். அவர் செய்த நன்மைகளை நினைத்து அவருக்குள் மகிழ்ந்து களிகூருவேன். மற்றவர்களுக்கு புத்திசொல்லி பாவ ஜீவியத்தில் இருந்து விடுதலை வாங்கிக்கொடுப்பேன். எனக்கு அனுபவிக்க கொடுத்த பொருளை பொறுமையுடன் அனுபவிப்பேன். அவருக்கு பொருத்தனை செய்து பொருத்தனையை நிறைவேற்றுவேன். ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வேன். பரிசுத்தத்ததை மாத்திரம் மன்றாடுவேன்' - என்று பிரதிஷ்டையுடன் ஜெபிப்போம். இந்த வருடம் யாருக்கும் இல்லாத ஆசீர்வாதத்தை தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு தருவார்.

கடந்த வருட ஊழியம், 3 நாட்கள் உபவாசஜெபம் அற்புதமாய் நடத்தினார். புதிதாக ஊத்துக்குழி, செம்பரம்பாக்கம், ஜெ.ஜெ. நகர் ஊழியங்களை தந்தார். 40 நாட்கள் தொடர் ஜெபங்களை தந்தார். இந்த ஆண்டும் ஏராளமான ஊழியங்களை நமக்கு தரும்படியாக ஜெபிப்போம். தமிழகத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்கள், வீடுகளை இழந்த பிள்ளைகள், தற்கொலைக்காக போய்கொண்டிருக்கும் பிள்ளைகள் விடுதலை பெற ஜெபிப்போம். நம்மை ஆளும் அதிகாரிகள், தலைவர்கள் ஞானத்துடன் ஆட்சி செய்ய அவர்களுக்காக ஜெபிப்போம். நம் தேசம் ஒரு சமாதானத்தின் தேசமாக மாற்றித்தர ஜெபிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துதல் சொல்லி உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்களுக்காக ஜெபிக்கும்

**Rev. V.** இஸ்ரவேல் தேவதாசன்




ஆசிரியர்
Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்
Publisher & Editor

சிறப்பு இலவசப்பிரதி

அடிச்சிட்டோர்
அன்பு அச்சகம்


**நோக்கம்**

பாவம் செய்து நரகத்திற்கு போகும் ஜனங்களைத் தடுத்து தேவ ராஜ்யத்திற்கு செல்ல அவர்களை ஆயத்தம் செய்வது


**முகவரி**
ஆத்ம நேசர் ஜெப ஐக்கியம்
எண் 2 -106, அகரம் மெயின் ரோடு,
அகரம் தென், சேலையூர்,
சென்னை - 600 073.
தொடர்புக்கு
044 - 2229 4058 / 2689
94440 30053 / 94440 30503

# 2018 – ஆம் ஆண்டு வாக்குத்தத்தம்



# நீ என்னுடையவன்

## ஏசாயா 43:1,2

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இந்த வசனத்தை சொல்லுகிறது யார் என்பதை முதலில் அறிய வேண்டும். ஏசாயா 43:1 யாக்கோபே உன்னை சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதப்பட்டு உள்ளது. வேத வாக்கியம் எல்லாம் நம் தேவனால் ஆவியானவர் மூலம் நமக்து தந்தருளப்பட்டது. அது நேற்றும் இன்றும் மாறாதது. பொய் சொல்லாதவர் நம் தேவன் ஆதி 1:1 ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார். நம்மை உண்டாக்கின கர்த்தர் சொல்கிறார் ஆதி 17:1 **நான் சர்வ வல்லமையுள்ள தேவன்** என்கிறார். அந்த சர்வவல்லமையுள்ள தேவன் சொல்கிறார் நீ என்னுடையவன். அப்படியானால் இந்த ஆண்டிலே நமக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்.

அந்த சர்வ வல்லமை உள்ள தேவன், தம் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். சமுத்திரத்தை கடக்கச் செய்தார். தூதர்கள் சாப்பிடும் மன்னாவை காலையிலும், காடைகளை மாலையிலும் கொடுத்தார். வனாந்திரத்தில் ஊற்றை உண்டாக்கினார். அவர்களை எதிர்த்து நின்ற எல்லா சத்துருக்களையும் முறியடித்து வெற்றி பெற செய்தார். எரிகோ கோட்டை தகர்ந்து விழும்படி செய்தார். யோர்தானை கடக்க செய்தார். அவருடைய பிள்ளையாகிய யோசுவாவை கொண்டு சூரியனையும் சந்திரனையும் நிறுத்தினார். தம் ஜனங்களை மீட்கும்படியாக தம் சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்குத் தந்து **"நீ என்னுடையவன்"** என்று சொல்லும்படியாக அவர் சொந்த குமாரனை

## உள்ளே

1. தேவசெய்தி
4. வேத வாசிப்பு பகுதி
5. ஆசீர்வாதம் யாருக்கு?
8. ஹாய் குட்டிஸ்
9. சாட்சிகள்
14. Overflowing Blessing
19. தீர்க்கதரிசனங்கள் உண்மையானவையா ?
20. பெலப்படுத்தும் தேவன்
23. படைத்தவர் பாதுகாப்பார்
26. Power of Blessing & Poverty
31. சமையல்

பலியாக ஒப்புகொடுத்து அவரை உயிர்த்தெழும்படியாக செய்தார். அந்த இரட்சகர் சர்வவல்லமையுள்ள தேவன் நம்மை பாதுகாத்து நீ என்னுடையவன் என்று சொல்வது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். கலங்காதே, பயப்படாதே, சோர்ந்து போகாதே, அவரை நோக்கி கூப்பிடும் போது நீ என்னுடையவன் என்று சொல்லி உன்னை தூக்கிவிடுவார்.

இஸ்ரவேல் ஜனங்கள் உணரும்படியாக நீ என்னுடையவன் என்கிறார். நான் உன்னுடன் இருக்கிறேன் என்கிறார். அவருடையவர்களாக இருப்போமானால் கர்த்தர் பகலில் மேகஸ்தம்பம் கொண்டும் இரவில் அக்கினி ஸதம்பம் கொண்டும் நடத்துவார். இந்த வருடம் எப்படி இருக்குமோ என்று கலங்கவேண்டாம் உபாகமம் 31:8 அவர் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை கைவிடுவதும் இல்லை. தாவீது ராஜா சொல்கிறார் சங் 66:12 மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப்பண்ணினீர். தீயையும், தண்ணீரையும் கடந்தோம். செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்து விட்டீர் என்று வேதம் சொல்கிறது போல நீங்கள் கடந்து வந்த பாதையில் அநேக பாடுகள், துன்பங்கள், வேதனைகள் இவைகளின் மத்தியில் இந்த புதிய ஆண்டு நாம் சிறுமைப்பட்ட நாட்கள் காலங்களுக்கு மேலாக சங் 90:14ன் படி நீங்கள் மகிழ்ந்து களிகூறும்படி செய்வார்.

வாக்குத்தத்த வசனம் நீ என்னுடையவன் தண்ணீரை கடக்கும் போதும், அக்கினியில் நடக்கும்போதும், ஆறுகளை கடக்கும்போதும், அக்கினி ஜுவாலை வழியாக செல்லும்போதும் அவைகளின் மத்தியில் நீ என்னுடையவன் என்று சொல்லி அவர் நம்முடன் இருந்து நம்மை வழிநடத்துவார்.

இவ்வுலகத்தில் எவ்வளவுதான் வாக்குத்தத்தங்கள் வந்தாலும், அவைகள் நிறைவேற நாம் வாக்குத்தத்தங்களை உடையவர் என்னுடையவர். ஆதலால் நான் பயப்படமாட்டேன் என்று உறுதியுள்ள விசுவாசத்துடன் எதிர்த்து நிற்கவேண்டும். தண்ணீரை கடக்கும்போது நான் உன்னுடன் இருக்கிறேன். தண்ணீர் என்பது நெருக்கத்தை குறிக்கிறது. இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தின் முன்பாக பயந்து நடங்கி நின்றபோது கர்த்தருடைய நாசியின் சுவாசத்தினால் சிவந்த சமுத்திரம் இரண்டானது. அவர் மோசேயிடம் கோலை நீட்ட சொன்னார். மோசே கீழ்படிந்தார். அங்கு நெருக்கமான சூழ்நிலையில் தம் ஜனத்தை நடத்தினார். சங் 46:11 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். நீங்கள் எல்லா சூழ்நிலையிலும் நெருக்கப்பட்டாலும் **"நீ என்னுடையவன்"** என்று சொல்கிறவர் உன்னுடன் இருந்து உன்னைத் தப்புவிப்பார்.



அடுத்தபடியாக **"ஆறுகளை கடக்கும்போது"** எந்த மனிதர்களும் அதன் இழுப்புசக்திக்கு பயப்படும் நிலைமை, பாதை தெரியாமல் இருக்கும் நிலைமை ஏற்படும். எலிசாவைப் பாருங்கள் யோர்தான் அருகே நின்று கொண்டு பாதை இல்லாமல் நின்ற நேரத்தில் தன்னை வழிநடத்தி வந்த எலியாவின் தேவன் எங்கே என்று சால்வையைக் கொண்டு அடிக்கிறார் 2இராஜா 2:13,14 யோர்தான் இரண்டாகப் பிரிந்தது உங்கள் வாழ்க்கையும் பாதை தெரியாமல் காணப்படும் சூழ்நிலைகள் வரும்போது கர்த்தர் பவுலைப்பார்த்து சொல்கிறார் **"நீ பயப்படாதே நான் உன்னுடன்**

இருக்கிறேன். உனக்கு தீங்கு செய்ய ஒருவனும் இல்லை ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை**"** என்கிறார். சங்கீதக்காரன் சொல்கிறார் **"கர்த்தர் என்னுடன் இல்லாவிட்டால் மனுஷர்கள் என்மேல் எழும்பின்போது என்னை விழுங்கியிருப்பார்கள்"**. அவர் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் அவருடையவர்கள். உபாகமம் 7:21 அவர்களைப் பார்த்து பயப்படவேண்டாம். உங்கள் தேவன் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் அவருடையவர்கள்.

தண்ணீர்களை விட, ஆறுகளை விட பயங்கரமான சூழ்நிலைகள் அக்கினியின் சூழ்நிலைகள். அக்கினி என்பது சோதனைகளையும் பாடுகளையும் குறிப்பதாகும். 1 பேதுரு 4:12,13 உங்கள் நடுவே பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ பதுமை என்று எண்ணாமல், அவருடைய பாடுகளுக்கு பங்குள்ளவர்கள் ஆனதால் சந்தோஷப்படுங்கள். அந்த அக்கினி வழியாக செல்லும்போது பொன் புடமிடப்பட்டு சுத்தமாக மாறுகிறது. அதைப் போல் கிறிஸ்தவ வாழ்க்கையில் அக்கினியால் புடமிடுகிற அநேகநேரங்களை கர்த்தர் அனுமதிப்பார். ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆவியானவர் அநேக பாடுகள் வழியாக நடத்திச் சென்று 1பேதுரு 1:7ன் படி அழிந்துபோகிற பொன் அக்கினியால் சோதிக்கப்படும். அதைவிட அதிக விலையேறப்பெற்றதாய் உள்ள உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும். யோபு பக்தன் அநேக பாடுகள் மத்தியில் சோதிக்கப்பட்டார். அதன் மத்தியில் அவர் சொல்கிறார் **"என் தேவன் ஜீவனுடன் இருக்கிறார் அவரை இந்த கண்கள் காணும்"** என்ற விசுவாசம் நமக்குள் வரட்டும் எபிரெயர்12:11 எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும். ஆகிலும் அதிகமாய் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதானபலனைத் தரும். அக்கினி நடுவில் நீ நடந்தாலும் வேகாதிருப்பாய். அது உன்னை சேதப்படுத்தாது. இந்த ஆண்டு எல்லா சூழ்நிலையிலும் உன்னுடன் இருந்து **"நீ என்னுடையவன்"** என்று வாக்கு கொடுக்கிறார்.

தேவன் நம்முடன் இருப்பதினால் அக்கினி ஜுவாலை உன்மேல் பற்றாது. அந்த அக்கினி நம்மை பிரகாசிப்பிக்கும். யாத்திராகமம் 3:3 இந்த முட்செடி வேகாமல் இருப்பது என்ன? நான் கிட்டப்போய் இந்த அற்புத காட்சியை பார்ப்பேன் என்றார் மோசே. இன்னும் ஒரு அற்புதகாட்சி நேபுகாத்நேச்சார் பார்த்தார் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை அக்கினியில் போட்டபோது அவர்கள் மீது அக்கினி ஜுவாலை பற்றவில்லை. இயேசுகிறிஸ்துவை குறித்து யோவான்ஸ்நானகன் சொல்லும்போது அவர் உங்களை அக்கினி ஜுவாலையாக மாற்றுகிறார். இவ்வுலகத்தில் உங்களை ஒன்றும் சேதப்படுத்தாதபடி அவர் உங்கள் ஜீவியத்தை அக்கினி ஜுவாலையாக மாற்றி, எந்த தீய சக்திகள் ஒன்றும் உங்களை அண்டாதபடி, அவருடைய சிங்காசனத்தில் இருந்துவரும் அக்கினி நதி உங்களை பாதுகாக்கும். சந்தோஷப்படுத்தும். அவர் வருகைமட்டும் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடன் இருப்பார். நீ என்னுடையவன் என்று சொன்னவர் சர்வவல்லமை உள்ள தேவன். அவர் உங்களை எல்லாவிதமான இக்கட்டுகளில் இருந்து விலக்கி உங்களையும், உங்கள் குடும்பங்களையும் கடைசிவரை நடத்துவார். உங்களை திக்கற்றவர்களாக விடார். கர்த்தர் வருஷத்தை நன்மையால் முடிசூட்டி, ஆறுகளை கடந்தாலும், தண்ணீரை கடந்தாலும், அக்கினியை கடந்தாலும் எல்லா பாடுகளையும் சமாதானம் சந்தோஷத்துக்குள்ளாக மாற்றுவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த ஆண்டு நம் ஒவ்வொருவரையும் **"நீ என்னுடையவன்"** என்று அழைக்கிறார்.




தேவ பணியில்

**Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்;**

# வேத வாசிப்பு பகுதி

தேதியும் அதிகாரங்களும்

## ஜனவரி மாத வேதப்பகுதி மற்றும் வேத வினாக்கள்

| நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி | நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி |
|---|---|---|---|
| 1 | 1 இராஜாக்கள் 5-7 அதிகாரம் | 16 | 1 நாளாகமம் 4-6 வரை |
| 2 | 1 இராஜாக்கள் 8-10 வரை | 17 | 1 நாளாகமம் 7-9 வரை |
| 3 | 1 இராஜாக்கள் 11-13 வரை | 18 | 1 நாளாகமம் 10-13 வரை |
| 4 | 1 இராஜாக்கள் 14-16 வரை | 19 | 1 நாளாகமம் 14-16 வரை |
| 5 | 1 இராஜாக்கள் 17-19 வரை | 20 | 1 நாளாகமம் 17-19 வரை |
| 6 | 1 இராஜாக்கள் 20-22 வரை | 21 | 1 நாளாகமம் 20-23 வரை |
| 7 | 2 இராஜாக்கள் 1-3 வரை | 22 | 1 நாளாகமம் 24-26 வரை |
| 8 | 2 இராஜாக்கள் 4-6 வரை | 23 | 1 நாளாகமம் 27-29 வரை |
| 9 | 2 இராஜாக்கள் 7-10 வரை | 24 | 11 நாளாகமம் 1-3 வரை |
| 10 | 2 இராஜாக்கள் 11-14 வரை | 25 | 11 நாளாகமம் 4-6 வரை |
| 11 | 2 இராஜாக்கள் 15-17 வரை | 26 | 11 நாளாகமம் 7-9 வரை |
| 12 | 2 இராஜாக்கள் 18-19 வரை | 27 | 11 நாளாகமம் 10-13 வரை |
| 13 | 2 இராஜாக்கள் 20-21 வரை | 28 | 11 நாளாகமம் 14-16 வரை |
| 14 | 2 இராஜாக்கள் 22-25 வரை | 29 | 11 நாளாகமம் 17-19 வரை |
| 15 | 1 நாளாகமம் 1-3 வரை | 30 | 11 நாளாகமம் 20-22 வரை |
| | | 31 | 11 நாளாகமம் 23-25 வரை |

## வேத வினாக்கள்

1. கல்லெறிந்து கொல்லப்பட்ட பகுதி விசாரிப்புகாரன் யார்?
2. தாவீதுக்கு ஒரு ஞானமுள்ள குமாரனை கொடுத்த கர்த்தர் இன்று ஸ்தோத்தரிக்கப்படுவாராக-யார் கூறியது?
3. யாருடைய இருதயம் கர்த்தருடைய வழிகளில் உற்சாகங்கொண்டது?
4. வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாகிய தீர்க்கதரிசியின் பெயர் என்ன?
5. பொன்னினால் இரண்டு கன்றுகுட்டிகள் செய்தது யார்?
6. என் தேவன் சொல்வதையே சொல்வேன் எனக்கூறிய தீர்க்கதரிசி யார்?
7. எரிகோவைக் கட்டினவன் யார்?
8. 5000 + 10,000 + 10,000 + 18,000 + 1,00,000 - இது என்ன?
9. சேயீர் புத்திரரின் தெய்வங்களை கொண்டுவந்து தனக்கு தெய்வங்களாக வைத்து பணிந்து கொண்டது யார்?
10. தாவீதின் நகரம் எது?

# ஆசீர்வாதம் யாருக்கு?



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு என்னுடைய புத்தாண்டு வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறேன். கடவுள் உங்கள் யாவரையும் அற்புதமாய் ஆசீர்வதிப்பாராக. கடந்த ஆண்டு நமக்கு ஜீவன், பெலம், சுகம் தந்தார். அப்படியான சுகத்தை கொடுத்த கடவுள் நம்மை இரட்டிப்பான நன்மையால் இந்த ஆண்டிலும் ஆசீர்வதிப்பாராக உபாகமம் 28:1 முதல் 16 ஆசீர்வாதம் நமக்கு உண்டு.

தேவ ஆசீர்வாதம் பெறுகிறவர்கள் கர்த்தருக்கு பயப்படுகிறவர்களாய் காணப்படுவார்கள் சங் 128:4, 115:13 உண்மையுள்ள மனுஷன், கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்திலும் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே கர்த்தரால் ஆசீர்வாதத்தை பெறுவான சங் 24:4,5

நாம் தினமும் அதிகாலையில் ஜெபம் பண்ண வேண்டும். லூக்கா 18:1 முதல் 4 வரை பிலிப்பியர் 4:6,7 தங்களை தாழ்த்த வேண்டும். லூக்கா 14:11 2 நாளாகமம் 34:27 பொல்லாத வழிகளை விட்டு விலகி நம்மை தாழ்த்த வேண்டும். அப்பொழுது நம்முடைய ஜெபத்தைக் கேட்பார்.

தேவ சாயலாக உருவாக்கப்பட்ட ஆதாம், ஏவாளை கர்த்தர் ஆசீர்வதித்தார் ஆதி 1:28 5: 1, 2 ஆனால் அவர்கள் கீழ்ப்படியவில்லை. கர்த்தருடைய கண்களில் கிருபை பெற்றவனும் கர்த்தருடைய கட்டளையின்படி செய்தவனுமாகிய நோவாவையும் அவன் குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார் (கீழ்ப்படிந்தான்)

விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்பட்ட கீழ்ப்படிந்தவனும் தேவனுடைய சிநேகிதனுமான ஆபிரகாமை கர்த்தர் ஆசீர்வதித்தார் ஆதி 26:12,13 மத் 13:8,23. காலேப் கடவுளை உத்தமமாய் பின்பற்றினபடியால் கடவுள் அவனை ஆசீர்வதித்தார் உபாகமம் 1:36 எண்ணாகமம் 14:24 தன்னை நிந்தித்து பரியாசம் பண்ணின சிநேகிதனுக்காக வேண்டுதல் செய்த யோபுவை கர்த்தர் ஆசீர்வதித்தார். இயேசு தம்முடைய சீஷர்களை ஆசீர்வதித்தார் லூக்கா 24:30.

அதே போல் நம்மையும் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்படிகிறவர்களாய் காணப்படவேண்டும். சிலர் வருடப்பிறப்பிற்கும், கிறிஸ்மஸுக்குந்தான் கோயிலுக்கு செல்வார்கள். அப்பொழுது அவர்கள் பொருத்தனை பண்ணுவார்கள். அன்று தான் நான் இனி குடிக்கமாட்டேன். கெட்ட பழக்கங்களுக்கு செல்லமாட்டேன். கடன் வாங்க மாட்டேன் என்றெல்லாம் பொருத்தனை பண்ணுவார்கள்.

ஆறுமாதம் கழிவதற்குள் திரும்பவும் அதே தவறை செய்வார்கள். கடவுள் எப்படி உங்களை ஆசீர்வதிப்பார். மனந்திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உனது சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாவிட்டால் பரலோக இராஜ்ஜியத்தைக் காணமுடியாது. ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள முடியாது நீதி 29:13.

பாவம் என்றால் என்ன? நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1யோவான் 3:4) பாவம் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதி முதல் பாவஞ்செய்கிறான். பிசாசின் கிரியை அழிக்கும்படிக்கு அவர் வெளிப்பட்டார்.

துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும். நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்கு கொடுக்கப்படும். நீதி 10:24. என் கட்டளைகளின்படி நடந்து என் நியமங்களைக் கைக்கொண்டு உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான். அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார் எசேக்கியா 18:9 உங்கள் பாவங்கள் கர்த்தர் உங்களுக்கு செவிகொடாதபடி அவருடைய முகத்தை மறைக்கிறது.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவன் தேவ மகிமை அற்றவர்களாக காணப்படுகிறோம் ரோமர் 3:23 ஆகையால் தேவனுடைய பிள்ளைகளே நாம் பாவம் செய்யாதபடிக்கு, பெருமை, கோபம், பொறாமை, விபச்சாரம், பெருந்தீனி பண ஆசை (பேராசை) சோம்பல் இவையாவும் மரணத்திற்கு ஏதுவான கொடிய பாவமே. இவைகளை விட்டு மனந்திரும்பாவிடில் இவர்களை கடவுள் எப்படி ஆசீர்வதிப்பார்.

ஒரு மனிதனுடைய மனக்கண் குருடாகும் பொழுது அவனுக்குள் இருக்கும் பெருமை ஆளுகை செய்கிறது. சிலருக்கு தன் பணத்தினால் பெருமை, சிலருக்கு தன் அழகை கொண்டு பெருமை. அவர்கள் யாரிடமும் அன்பு காட்ட முடியாது. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்கு பொறாமை கிடையாது. அன்பை நாடுங்கள். முதலில் குடும்பத்தில் அன்பாயிருங்கள். சகோதரர்களிடத்தில் அன்பாயிருங்கள். சபை தனில் அன்பாயிருங்கள். பழகும் மக்களிடம் அன்பாயிருங்கள். அப்பொழுது இழந்து போன எல்லா ஆசீர்வாதம் எல்லாம் நமக்கு கிடைக்கும்.

**கோபம்** நிஸ்டூரமுள்ளது. கல் கனமும் மணல் பாரமுமாயிருக்கும் இவ்விரண்டைவிட கோபம் அதிக பாரமாகும். நீதி 27:34 நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். நீங்கள் தனிமையாய் இருக்கையில் தேவனுடன் உறவாடுகிறவர்களாக காணப்படவேண்டும். அப்பொழுது நம்முடைய கோபம் பறந்துவிடும். சமாதானத்தோடே படுத்து நித்திரை செய்வேன். நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப்பண்ணுவீர் என்று சொல்லுங்கள்.

**பேராசை** பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதற்குள் விழுந்து விசுவாசத்திலிருந்து நழுவி விழுகிறவர்களாய் காணப்டுகிறார்கள். 1தீமோ6:10 பிரசங்கி 5:10. பெருந்தீனி மதுபான பிரியரையும் மாம்ச பெருந்தீனிக்காரனுடனும் கூடச் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்தரராவார்கள் நீதிமொழியில் அநேக வசனங்கள் சொல்லப்பட்டிருக்கு நீதி 23:20,21 பிலிப்பியர் 3:19 இப்படிப்பட்ட பாவங்கள் எல்லாம் மரணத்துக்கு ஏதுவான பாவமாய் இருக்கிறது. அவன் தேவ மகிமையற்றவனாய் காணப்படுகின்றான். தன் பாவத்தை அறிக்கையிடுகிறவன் உணர்ந்து கண்ணீரோடு தேவ சமூகத்தில் வரும்பொழுது ஆசீர்வதிக்கபடுகிறவனாக காணப்படுகிறான். பாவிகள் நீதிமான்களின் சபையில் நிலைநிற்கிறதில்லை. பாவத்துக்கு செத்து நீதிக்கு நாம் பிழைக்கும்படி செய்ய நீதிமான்களின் கூடாரங்களில் அநேக ஆசீர்வாதங்கள் உண்டு.

உண்மையுள்ள பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் நீதி 28:20

உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் நீதி 12:22

தாவீது ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே நான் உமக்கு முன்பாக மன உண்மையும் உத்தமுமாய் நடந்தேன் என்கிறான். ஆகவே ஆண்டவர் அவனை நோக்கி உன் வீடும் உன் ராஜ்யமும் என்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் 2சாமுவேல் 7:16.

சில பெண்கள் குடும்ப வாழ்க்கை வாழ வரும்பொழுது மிகுந்த ஆசீர்வாதம் வேண்டும் என்று நினைப்பார்கள். ஆசீர்வாதமாக இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். உன் வீடும்

நிலைபெற்றிருக்க வேண்டுமானால் தாவீதைப் போல உண்மையும் உத்தமுமாய் நடக்கவேண்டும். இன்று அநேகருடைய வாழ்க்கையில் சோர்வு, சலிப்பு. சஞ்சலம் நேரிடுகிறது. ஆனால் கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் திருப்தியாயிருப்பார்கள். தீமை அவர்களை அணுகாது. தேவ கிருபை அவர்களை காக்கும். அவர் கண்கள் உன்மேல் நோக்கமாயிருக்கிறது. நான் தனிமையாய் இருக்கிறேன் என்றும் நான் ஓர் அனாதை என்றும் ஒருநாளும் அங்கலாய்க்க வேண்டியதில்லை.

அன்னாள் கூட இருந்த தேவன் உங்களுடன் இருப்பார். ஆகார் என்ற அடிமைப்பெண் என்னுடைய பிள்ளை மரிக்கப்போகிறது இனி என்ன சந்தோஷம் இருக்கிறது. எல்லாம் முடிந்து போயிற்று என்று தனிமையில் கண்ணீரோடு கதறினாள் கடவுள் தேடிவந்து ஆறுதல்படுத்தினார். (ஆசீர்வதித்தார்)ஆதி 16:13 எல்லாராலும் கைவிடப்பட்ட அவளை ஆண்டவர் கைவிடவில்லை. ஆதலினால் எல்லா தீமைக்கும் விலக்கி காணப்படுவோமேயானால் (விசேஷமாக) பண ஆசை இல்லாதவர்களாய் நடப்போமேயானால் அவர் நம்மை கைவிடவேமாட்டார். நாம் அவர் கரத்தை பற்றிக்கொள்கிறவர்களாய் காணப்பட வேண்டும். எப்படியெனில் தேவனாகிய கர்த்தருடைய கரம் என்மேல் இருதயத்தினால் நான் திடன்கொண்டு இஸ்ரவேலில் சில தலைவரை என்னோடே வரும்படி சேர்த்துக்கொண்டேன் (எஸ்றா 7:28)

தேவனுடைய பிள்ளைகளே இப்புதிய ஆண்டிலே நாம் பிறர் இடத்தில் அன்பு கூறவேண்டும். அதாவது அன்பு கூறுவதற்கு முந்திக்கொள்ள வேண்டும். விசுவாசத்தில் உறுதியாய் நிற்கிற பிள்ளைகளாய் காணப்பட வேண்டும். யோபு ஒரு நீதிமானாய் காணப்பட்டபடியால் அவன் இரட்டத்தனையான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான். இம்மூன்று விதமானோருடையவர்களாய் காணப்படுவோமேயானால் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். குணசாலியான ஸ்திரியை கண்டுபிடிப்பவன் யார்? குணசாலியான ஸ்திரி வீட்டை கட்டுவாள். பிள்ளைகளை தேவ வழிபாடுகளுக்குள் கொண்டு வருவாள். அதிகாலையில் ஜெபிக்கிற பிள்ளைகளாய் காணப்படவேண்டும். வேதம் வாசிக்க வேண்டும். தன் பாவங்களை அறிக்கையிடுகிறவர்களாய் காணப்படவேண்டும். அப்பொழுது தேவசித்தம் உங்களில் நிறைவேறும். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார். வரப்போகிற புதிய ஆண்டிலே அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நானும் என் வீட்டாருமேவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்ற வேத வசனங்களின் படி நாளடைவில் அந்த இல்லம் முழுவதும் தெய்வீக இரட்சிப்பின் இன்பம் பெற்று மகிமை அருள்புரிவாராக!


இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள் அன்பான,
சகோதரி. *மேபல் இஸ்ரவேல்*



ஹாய் குட்டிஸ் !!!

# பறந்து காக்கும் பட்சி

Hello குட்டீஸ்! புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒரு ஆண்டை முடித்து மற்றொரு புது ஆண்டுக்குள் நுழைந்து இருக்கிறோம். இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்று நினைக்கிறீங்களா? கவலைப்பட வேண்டாம் பறந்து காக்கும் பட்சியைப் போல கடந்த ஆண்டில் பாதுகாத்த தேவன் இந்த ஆண்டும் பாதுகாப்பார். பாலகனாய் பிறந்து சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். எதற்காக? நம்மை இரட்சிக்க, பாதுகாக்க ஆசீர்வதிக்க, என்பதை மறந்து விட வேண்டாம். அவரின் தியாகம் ஈடு இணையற்றது தாயைப் போலத் தேற்றி, தந்தையைப் போல அணைப்பார். இயேசுவின் தியாகம் எப்படிப்பட்டது என்பதை ஒரு கதை மூலம் உங்களுக்கு விளக்குகிறேன்.



ஓர் அழகிய ஊரின் அருகில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அதன் நடுவில் அழகிய நீர்த்தடாகம் ஒன்று காணப்பட்டது. அதில் வாத்து தன் குஞ்சுகளுடன் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் வாத்து தன் குஞ்சுகளுடன் picnic செல்ல நினைத்து காட்டைச் சுற்றி வந்தது. குஞ்சுகள் மிகவும் ஜாலியாக அங்கும் இங்கும் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தன. அப்போது தூரத்தில் குள்ள நரி ஒன்று வருவதைக் கண்ட வாத்து தன் குஞ்சுகளுக்கு குரல் கொடுத்து தண்ணீருக்குள் செல்லச் சொன்னது குள்ளநரி வாத்தினை நெருங்கி வந்த போது வாத்து தன் இறக்கை ஒன்று காயப்பட்டதைப் போல பாசாங்கு செய்து மெதுவாக நடந்தது. நரிக்கு ஒரே கொண்டாட்டம் ஆஹா! நல்ல உணவு என்று வாத்தின் பக்கத்தில் வந்த போது அது தன் திசையைத் திருப்பி வேறு பக்கமாகச் சென்றது. நரியும் அதனைப் பின் தொடர்ந்து சென்றது. அதற்குள் குஞ்சுகளும் தண்ணீருக்குள் சென்றுவிட்டன. அதனைக் கண்ட தாய் தன் இறக்கையை விரித்து பறந்து தண்ணீருக்குள் சென்றது. தன் குஞ்சுகளோடு ஜாலியாக நீந்தி விளையாடியது. நரியோ ஏமாற்றத்தோடு சென்றது.

**மனப்பாட வசனம்**

வருஷத்தை உம்முடைய நன்மையினால் முடிசூட்டுகிறீர்: உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

(சங் 65:11)

பார்த்தீங்களா! குட்டீஸ்! இப்படித்தான் நம் தேவனாகிய கர்த்தர் நம்மைப் பிசாசின் கையிலிருந்து கடந்த ஆண்டு முழுவதும் பாதுகாத்தார். இந்தப் புது ஆண்டிலும் உங்களது தேவையை சந்தித்து, சுகத்தையும் பெலனையும் தந்து நன்மையினால் திருப்தியாக்குவார். பறந்து காக்கும் பட்சியைப் போல பாதுகாப்பார் ஆமென்.




கிறிஸ்துவுக்குள் அன்பான,

**Mrs.** *சாந்தி ஜெென்சிங் ஜோசுவா*

# சாட்சிகள்



**தேவன் உங்களுக்குச் செய்த அற்புதங்களை சாட்சியாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்... அது அநேகருக்கு பிரயோஜனமாயிருக்கும்... ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்...**

## பெலவீனத்திலிருந்து விடுதலை தந்த தேவன்

**சகோதரி. மேரி, குரோம்பேட்டை**



போராட்டம், பிரச்சனை மத்தியில் இங்கு வந்தோம். தேவன் ஒவ்வொன்றிலும் எங்களுக்கு விடுதலை தந்தார். கடந்த 6 மாதமாக சபைக்கு வரமுடியாதபடியான சூழ்நிலையில் இருந்தோம். என் தாயாருக்கு இருதய பிரச்சனை ஏற்பட்டது. எனக்கும் காலை மடக்க முடியாத பெலவீனம் ஏற்பட்டது. மீண்டும் சபைக்கு வந்தோம். எங்களுக்கு விரோதமான கிரியைகளை ஐயா கடிந்து ஜெபித்தார்கள். முட்டிப்போட முடியாதபடி இருந்த எனக்கு கர்த்தர் விடுதலை கொடுத்தார். என் தாயாரையும் கர்த்தர் பெலப்படுத்தினார். கர்த்தர் எங்களுக்கு கொடுத்த விடுதலைக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கும் குடும்பத்தினருக்கும் நன்றி!

## அற்புதங்களின் தேவன்

**ஊரப்பாக்கத்திலிருந்து ஒரு சகோதரி,**

இரண்டு வருடமாக என் சரீரத்தில் அதிக பெலவீனமாக இருந்தது. பிசாசு போராட்டத்தில் கஷ்டப்பட்டு வந்தேன். ஒருவர் கொடுத்த பத்திரிக்கையை வைத்து இந்த சபைக்கு நானே வந்தேன். ஐயா ஜெபித்தார்கள். செத்த ஆவியினால் பிரச்சனை என்று கூறி வெளிப்படுத்தினார். கர்த்தர் எனக்கிருந்த பிசாசு பிரச்சனையிலிருந்தும் செத்த ஆவி பிரச்சனையிலிருந்தும் விடுவித்தார். இப்போது நான் நல்ல சுகமாக இருக்கிறேன். ஜெபத்திற்கு வருவதற்கு முன்பு குறைவாக இருந்த இரத்தத்தின் அளவு இப்போது அதிகரித்துள்ளது. மேலும் கர்ப்பத்தின் கனி இல்லாத ஒரு குடும்பத்தை அழைத்து வந்தேன். ஐயா ஜெபித்தார்கள். தேவன் இந்நாளில் கர்ப்பத்தின் கனியை அந்த குடும்பத்திற்கு தந்துள்ளார். கர்த்தர் செய்த எல்லா நன்மைக்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

# ஜெப எண்ணெயினால் அற்புதம்

**சகோதரி. ராணி, சேத்துப்பட்டு**



எங்கள் வீட்டில் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் இருந்தது. சுற்றியுள்ள வீடுகளில் அதிக ஆழத்திற்கு குழாய் இறக்கியதால் எங்களுக்கு தண்ணீர் இல்லை. பிளம்பரை வரவழைத்து பார்த்தோம். இன்னும் அதிக ஆழத்திற்கு நீங்கள் குழாய் இறக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் தண்ணீர் வர வாய்ப்பில்லை என்றார். நான் விசுவாசத்துடன் ஐயா கொடுத்த ஜெப எண்ணெயை குழாயில் ஊற்றி ஜெபித்தேன். கர்த்தர் கிரியை செய்தார். இந்த மழை நாட்கள் வரும் வரை தண்ணீர் வரும்படி கர்த்தர் கிருபை செய்தார். மேலும் போராட்டம், பிரச்சனையுடன் காணப்பட்ட எங்களை இந்த இடத்திற்கு வந்ததின் நிமித்தம் ஐயா ஜெபத்தினால் கர்த்தருடைய கிருபையால் எங்களை இம்மட்டும் விடுவித்திருக்கிறார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

# ஜெப எண்ணெயினால் விடுதலை தந்த தேவன்

**Bro. ரோஸ்லின் செல்வி, படப்பை**

எனது கணவருக்கு திடீரென்று பயங்கர வயிற்றுவலி வந்தது. தாங்கமுடியாத வலியாக இருந்தது. விளக்கெண்ணெயை போடச் சொன்னார். அப்போது கர்த்தர் உணர்த்தினார். ஐயா ஜெபித்து கொடுத்த எண்ணெயை போடச்சொன்னார். விசுவாசத்துடன் போட்டேன். கர்த்தர் கணவருக்கு விடுதலை கொடுத்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

# வாக்குத்தத்தம் நிறைவேற்றிய தேவன்

**Sis. எஸ்தர், தாம்பரம்**

நான் இந்த இடத்திற்கு ஜெபத்திற்கு வரும்போது என்னுடைய தொழிலை, நன்மையை இழந்து போன நிலையில் இங்கு வந்தேன். ஐயா எனக்காக, குடும்பத்திற்காக பாரப்பட்டு ஜெபித்தார்கள். கர்த்தருடைய வார்த்தை ஐயா மூலம் எனக்கு வந்தது. "நீ இழந்து போன எல்லாவற்றையும் நான் உனக்கு திரும்ப தருவேன்" என்று பேசினார். அந்த வார்த்தையின் படி கர்த்தர் இந்த நாளில் இழந்து போன கடை வியாபாரத்தை திரும்பவும் எனக்கு தந்து என்னை ஆசீர்வதித்தார். கடையை நடத்தவும் பெலன் தருவேன் என்று கர்த்தர் ஐயா மூலம் பேசினார். அதன்படி இம்மட்டும் நடத்த கிருபை செய்துள்ளார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!



## விடுவித்து பாதுகாத்து வரும் தேவன்

**Sis. விமலா, பெரும்பாக்கம்**

நான்கு வருடமாக பிசாசு போராட்டத்தினால் அதிகமாக கஷ்டப்பட்டேன். இங்கு ஐயாவிடம் வந்து ஜெபித்தேன். ஒவ்வொரு போராட்டத்திலும் இருந்து கர்த்தர் விடுதலை கொடுத்தார். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை "குடும்பம் முழுவதும் நான் விடுதலையாக்குவேன்" என்று பேசினார். கடந்த நாட்களில் ஐயாவை எங்கள் வீட்டிற்கு அழைத்தோம். ஐயா வந்து எங்களுக்காக ஜெபித்தார்கள். என் கணவருக்கு இருந்த போராட்டத்திலிருந்து கர்த்தர் அந்நாளில் தானே விடுவித்தார். இந்த மாதம் முழுவதையும் கர்த்தர் எங்களுக்கு ஆசீர்வதித்து தந்தார். விடுதலை கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்கு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## வேலையை கட்டளையிட்ட தேவன்

**Sis. புஷ்பா, பெருங்களத்தூர்**

கடந்த வருடம் எனது மகன் வேலைக்காக வெளிநாடு சென்றான். இதனால் எனது மருமகளும் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு வெளிநாடு சென்றார். பின்பு 3 மாதம் கழித்து சென்னை வந்தார். இங்கு வந்து வேலை தேடினால் ஒரு இடமும் கிடைக்கவில்லை. நான் ஐயாவிடம் வந்து மருமகளின் வேலைக்காக சொல்லி ஜெபித்தேன். கர்த்தர் அற்புதம் செய்தார். இந்த நாட்களில் கர்த்தர் வேலை கொடுத்து உள்ளார். 1ஆம் தேதியிலிருந்து வேலைக்கு செல்கிறார். வேலை கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## சுகம் கொடுத்த தேவன்

**சகோதரி. சாராள், கருநீலம்**

எனது பேத்தி இரண்டரை வயது குழந்தையாக இருக்கிறாள். அவளுக்கு இரண்டு நாட்களாக சிறுநீர் வெளியேறாமல் மிகவும் கஷ்டப்பட்டாள். இருதயமும் வீங்கியிருந்தது. Scan எடுத்துவர டாக்டர் சொல்லிவிட்டார். நாங்களும் ஸ்கேனையும் குழந்தையையும் ஐயாவிடம் கொண்டு வந்து ஜெபித்தோம். ஐயாவும் பாரத்தோடு ஜெபித்தார்கள். டாக்டரிடம் கொண்டு போனபோது அவர் குழந்தைக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லை என்று சொன்னார். மேலும் எனது பெரிய மகளுக்கு ஒரு ஆப்ரேசனை ஜெயத்துடன் முடித்தார். கர்த்தர் செய்த அற்புதங்களுக்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## பயத்திலிருந்து விடுதலை தந்த தேவன்

**Sis. அம்சா சாமுவேல், கௌரிவாக்கம்**

நான் பிசாசின் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களாய் இருந்தேன். பிசாசானவன் எப்போதும் "நீ என் கரத்தில் தான் இருக்கிறாய் என்னிலிருந்து உன்னை பிரிக்க முடியாது என்று எப்போதும் என் மனதில் சொல்லுவான்". அதினிமித்தம் நான் பயங்கர பயத்தின் ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்தேன். பயத்தினால் என் எலும்புகள் எல்லாம் கூசும். இந்த சூழ்நிலையில் ஐயாவுடைய விலாசம் கிடைத்து இங்கு வந்தோம். ஐயா ஜெபித்தவுடன் "நான் உன்னுடன் இருக்கிறேன். உன் பயத்திலிருந்து உன்னை விடுவிப்பேன்" என்று கர்த்தர் பேசினார். இப்போது எனக்கு அந்த பயம் இல்லை. சத்துரு வெட்கப்படும்படி கர்த்தர் கிருபை செய்தார். பயத்திலிருந்து விடுதலை கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## ஜீவனுள்ள சாட்சியாக நிறுத்தின தேவன்

**Bro.** மோகன், கொடுங்கையூர்



எனக்கு 2015ம் வருடத்தில் திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டது. எனது கிட்னியிலும் பிரச்சனை ஏற்பட்டது. 2.5 செ.மீ அளவிற்கு கிட்னியில் கல் காணப்பட்டது. அதனை கரைக்கவோ ஆப்பரேஷன் பண்ணவோ முடியாத சூழலில் எனது சரீரம் காணப்பட்டது. இதனால் 3 மாதம் ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்தேன். சிறுநீர் வெளியேற எப்போதும் Bag-ம் Tube-வுடன் தான் இருந்தேன். பயங்கர நெஞ்சுவலி, பயத்துடன் இருந்து வந்தேன். இந்த சூழலில் ஐயா குறித்து கேள்விப்பட்டு இந்த சபைக்கு வந்தேன். கர்த்தருடைய வார்த்தை ஐயா மூலம் வந்தது. "உனக்கு மாந்திரீகம் பண்ணி வைக்கப்பட்டுள்ளது. நீ மரிக்க வேண்டும் என்று", அதனால் 7 நாட்கள் உபவாசம் பண்ணி ஜெபி. நான் விடுவிப்பேன் என்ற கர்த்தர் பேசினார். அதன்படி உபவாசம் பண்ணி ஜெபித்தேன். மீண்டும் கர்த்தருடைய வார்த்தை 21 நாட்கள் உபவாசம் பண்ணி ஜெபி எனறு பேசினார். என்னால் ஒன்றுமே முடியாது. ஆனாலும் மாலை 6 மணி முதல் 12 மணி வரை ஸ்தோத்திரம், இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று உட்கார்ந்தே சொல்லி ஜெபித்தேன். ஐயா ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெயை இதயபகுதி, கிட்னி பகுதியிலும் விசுவாசத்துடன் பூசி வந்தேன். கர்த்தர் அந்த கல்லை உடைத்து வெளிவரும்படி கிருபை செய்தார். நான் கர்த்தர் கொடுத்துள்ள சுகத்தினால் நன்கு சுகமாக இருக்கிறேன். விற்க முடியாதபடி காணப்பட்ட எனது வீடு விற்க ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். "கர்த்தர் உனக்காக யாவையும் செய்து முடிப்பார்" என்று ஐயா மூலம் பேசினார். அந்த வீட்டையும் நல்ல விலைக்கு விற்க கிருபை செய்தார். எனக்கு சரீரத்தில் tube போட்டிருந்தார்கள். 3 மாதத்திற்கு மேலானால் Infection ஆகிவிடும் அதைச் சொல்லி ஐயாவிடம் ஜெபித்தேன். "உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்" என்று கர்த்தர் பேசினார். அதன்படி அந்த tube-ம் வெளியே எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். மேலும் எனது மகள் 10-ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து பாஸ் பண்ண ஜெபிக்க சொன்னே. எனது மகள் 467 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற கிருபை செய்தார். இன்று வரையிலும் கர்த்தர் எனக்கு பூரண சுகம் தந்து விடுதலையோடு வைத்துள்ளார். எனக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி! விடுதலை கொடுத்த தேவனுக்கும் கோடி ஸ்தோத்திரம்.

## சுகம் கொடுத்த தேவன்

**Sis.** தாரா, பெசன்ட்நகர்

எனது மகளும், பேரனும் டெங்கு ஜுரத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். சபையில் அனைவரும் எங்களுக்காக ஜெபித்தார்கள். ஐயா ஆஸ்பத்திரிக்கு வந்து ஜெபித்து சென்றார்கள். கர்த்தர் விடுதலை கொடுத்தார். அடுத்த நாளே வீடு வர கர்த்தர் கிருபை செய்தார். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

# இக்கட்டிலிருந்து விடுவித்த தேவன்

**Sis. கண்மணி, நைனார்குப்பம்**



நாங்கள் நைனார்குப்பத்தில் கடை வைத்து இருக்கிறோம். கடந்த ஏப்ரல் மாதத்தில் எங்களது கடை owner வந்து இரண்டு நாட்களில் நீங்கள் கடையை காலி பண்ணவேண்டும். என்னால் time தரமுடியாது என்று சொல்லிவிட்டு, உடனே advance தொகையையும் கொடுத்துவிட்டார். எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. நான் ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். கர்த்தருடைய வார்த்தை “உன்னை அந்த இடத்திலே நிலைநிறுத்துவேன். நீ வெட்கப்படுவதில்லை. அந்த இடத்திலே உன்னை ஆசீர்வதிப்பேன் நீ நிலைநிறுத்தப்படுவாய் என்று பேசினார். அதன்படி எத்தனையோ குழப்பங்கள் வந்தபோதிலும், ஊர் மக்கள் மத்தியில் நாங்கள் வெட்கப்படாதபடி மீண்டும் அதே இடத்தில் தொடர்ந்து தொழிலை செய்யவும் கர்த்தர் எங்களுக்கு இரக்கம் பாராட்டினார். எனது திருமணத்திற்காக ஐயா தொடர்ந்து ஜெபித்து வந்தார்கள். தேவன் எனது திருமணகாரியத்தை ஒழுங்குபடுத்தியுள்ளார். எங்களுக்கு அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## கடந்தமாத வேதவினாக்களுக்கான விடைகள்

1. 40 வயது யோசுவா 14:7
2. சவுல் தாவீதை நோக்கி 1 சாமுவேல் 26:25
3. யெப்தா நியாயாதிபதிகள் 11:34,35
4. ஓபேத் ஏதொமின் வீட்டில் மூன்று மாதம் 2சாமுவேல் 6:11
5. ராமதாயீம் 1சாமுவேல் 1:1
6. ஒரு வருஷமும் நாலு மாதமும் 1சாமுவேல் 27:7
7. ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்கு 2சாமுவேல் 24:24
8. சாலமோன் 1 இராஜாக்கள் 4:29
9. அர்பா யோசுவா 14:15
10. நியாயாதிபதிகள் 20:2

# Overflowing Blessings



It is glad to begin a new thing. Celebrating our birthday, wedding day and other anniversaries are all joyful occasions. Likewise, celebrating the birth of a new year is joy and refreshing to our mind and it gives us a hope of new beginning. Each beginning becomes more blessed and joyful if it looks prospective. It becomes even more unfathomable if we have promises of our heavenly father to support, supply and care for the year.

This year the Lord promises an overflowing blessing and plenty of joy in our life. This is going to be a year of bountiful restoration of what you have lost. The Lord blessed the people of Israel and promised restoration, "*The threshing floors will again be piled high with grain, and the presses will overflow with new wine and olive oil*" (Joel 2: 24). Yes, there could have been discouraging things happened in the family, business and in personal life. But the Lord is with you this year and He says, 'I am going to bless you in leaps and bounds, with overflowing blessings'. You shall grow in multiple measures for the shame and loss you incurred in life. You will be astonished by the way the Lord blesses His children.

## Prosperity of the Lord

It is the law of the universe that we all get our food and needs met from the work we do. What the world knows is that, if you work for longer hours, then you gain more penny and more wealth and more joy. So we all tend to work harder and harder to get that more blessing. But, is it the Lord's way?! No, the Lord does not do things in worldly way. Though we live in the world, our blessings proceed from heaven. James 1: 17 say "*Every good and perfect gift is from above, coming down from the Father of the heavenly lights, who does not change like shifting shadows.*" It is the Lord's blessings that make us rich and blessed. The Lord doesn't need neither your strength nor your hard work, nor a great business or job to bless you. Instead He can bless you in the same job, same environment by turning them into your favor.

As an evidence, bible talks about the life of Isaac, son of Abraham, on how the Lord blessed him and his farming land to render high yielding than the neighboring fields. It is amazing to see how the Lord had blessed him. Genesis 26: 12 says: "*Isaac planted crops in that land and the same year reaped a hundredfold, because the LORD blessed him*". See Isaac sowed in the land same as his neighbors. He used similar seeds and farmed in similar weather condition. He had similar skilled laborers as the neighbors to work in the field. Almost everything was similar. But the yielding was 100 times more than the regular harvest. He

was blessed in multiples of 100. How amazing it is! For example If everybody's takes home Rs.10, 000 as their profit, then Isaac was taking Rs.10,00,000 (10,000 X 100) for the same work, same time and investment.

What an amazing thing. People never knew that land could yield this much. See the difference in numbers between the Lords work and the hard work of this world. The strategies of this world would not bless you abundantly with overflowing and multiplying blessings. It is the hand of the Lord with your work that makes the difference. Isaac was blessed that year. The following verse says that Isaac became very blessed "*The man became rich, and his wealth continued to grow until he became very wealthy. He had so many flocks and herds and servants that the Philistines envied him.*" (Genesis 26: 13 & 14). When He blesses, it is always in a way astonishing to others. Today, you might be in a small company working for little salary or in running a business that is not yielding enough. But if you believe in the Lord, then you shall be blessed abundantly. He shall remove the veil from your head and anoint your head with an overflowing blessing. Say Amen.

## Prosperity in the drought season

You know? I am excited to talk about the Lord and how He can lead us even in the drought situation. In the sight of the world economy maybe in depression and recession, furthering job slash and anything they could call for the draught. But we have the Lord, who blesses us bountifully even in the time of famine and with literally nothing. You might wonder what am I talking! Yes, I am with full sense saying that the Lord blesses His children with overflowing blessings in the driest of the dry season. So be encouraged to get the word of the Lord into your life.

The Lord used Joseph to bless the King of Egypt and the people of Israel during the driest of the dry season. The Pharaoh had a disturbing dream which his nobles and magicians weren't able to interpret. He was distressed because none could give a right interpretation. It was Joseph who was able to interpret the King's dream. That, for seven year there shall be prosperity and next seven years shall be worst famine even destroying the prosperity of the first seven years. When King heard this, he had no idea on how to handle the situation of both the prosperity and the famine. Joseph's suggestions were well received by Pharaoh and his officials. So Pharaoh asked his officials, "*Can we find anyone else like this man so obviously filled with the spirit of God?" Then Pharaoh said to Joseph, "Since God has made all this known to you, there is no one so discerning and wise as you. You shall be in charge of my palace, and all my people are to submit to your orders. Only with respect to the throne will I be greater than you.*" (Genesis 41: 37-40). It was the Lord given wisdom in Joseph made him the project head to handle both the prosperity and famine. The famine life of Joseph took an 'U' turn here. His drought life in the prison was changed to a prosperous life in the palace. The people whom he was serving were asked to serve him and honor him. What an awesome game change to a situation where Egypt was about to face uncertainty. The uncertainty in the external world had nothing to do with the man

of God, Joseph. So is it with all of His children.

Your future might look bleak because of your job, business and family situations. Don't worry; You shall be blessed this year. In the very depressing situation in the pharaoh's kingdom, when everyone was threatened of their job, Joseph's job was secured, had more authority and had assignments to do because God was with him.



It was not only Joseph; even the kingdom of Egypt was prosperous in the drought. Genesis 41: 56 & 57 *"So when the famine had spread over all the land, Joseph opened all the storehouses and sold to the Egyptians, for the famine was severe in the land of Egypt. Moreover, all the earth came to Egypt to Joseph to buy grain, because the famine was severe over all the earth*". The verses describe how worst the famine was, how the people came from all over the world to buy grains from Joseph. While the whole world was lacking, barns that the Joseph was in-charge were overflowing. Nations were selling all their precious things to Joseph to convert them into food grains. Egyptian treasury was filling while the other global treasuries were getting bankrupt. Egyptian economy machinery was running prospectively while the world economy was sliding like nose dive. If the Lord is there in our life, prosperity and blessings become inevitable part of our life irrespective of our situation. So do not worry about what is ahead of us. Just stay close with the Lord, you shall be prosperous even in the driest of the dry season.

## Keys to Prosperous Life


### *Faith and Obedience*

Many of us miss out prosperous blessings because we don't hold on to faith and obedience to His words. If the Lord tells you to trust Him all the way, then you should trust Him till the end, not till the half way. Many people forget God when they become a bit prosperous or faced with difficulty. Even believers at times have the problem of believing God and His wonderful plan for our life. We design, execute our plans ahead of His plan and end in a mess.

Samson who was supposed to judge the nations was half true to God and then for rest of his life he was away from God in despair. We know where he ended up. It takes obedience to get blessed. That is abiding by the word of God and believing those words in our life. God

has greater plans for everyone. But the completeness of the plan is possible only with Lord Jesus Christ. It is the Lord alone who can make us prosperous in our calling. When you obey and start walking in the spirit, the Spirit of the Lord shall make wondrous things in our life. Don't walk in fleshy thoughts; seek the Lord and His guidance.

Likewise, the Lord promised Canaan, a land flowing with milk and honey to the Israelites when they were actually walking in the wilderness. Few leaders went to survey the Canaan and to plan a strategy. When they returned back surveying Canaan which the Lord promised to give, they were all filled with disbelief about capturing Canaan. "*Then they told him, and said: "We went to the land where you sent us. It truly flows with milk and honey, and this is its fruit. Nevertheless the people who dwell in the land are strong; the cities are fortified and very large; moreover we saw the descendants of Anak there. The Amalekites dwell in the land of the South; the Hittites, the Jebusites, and the Amorites dwell in the mountains; and the Canaanites dwell by the sea and along the banks of the Jordan."(Number 13: 27 - 29).* Actually, it was the Lord's promise to give the Land of Canaan to the people of Israel. Because of their disbelief and unwillingness to obey and trust God, they grumbled against the Lord and their leader Moses. Their eyes were just on the things that looked impossible to them. So they said, Canaanites are more powerful, had fortified walls, we would be grasshopper in their sights and could die in the war against them. And they refused to enter Canaan and rebellious in receiving the land promised by the Lord. Because of their lack of faith, disobedience and rebelling spirit, the Lord guided them in another way to the same Promised Land which took 40 years to enter the same Promised Land.



It is our lack of faith and obedience to God that has been stopping us from receiving His blessing. This year do not stop the greater path and vision the Lord has given. Just plunge with faith and walk by His word, then you shall be blessed with overflowing, multiple blessings.

## *Giving Cheerfully*

Proverbs 3: 9 & 10 says about another key to have an overflowing blessings is "*Honor the LORD with your wealth, with the first fruits of all your crops; then your barns will be filled to overflowing, and your vats will brim over with new wine*" (Proverbs 3: 9,10). It is true. It is not bribing God. Because we can't bribe God with our belonging. It is honoring the Lord by

the best we have. Have seen, heard and experienced how the Lord blesses the cheerful givers. Many are prosperous by giving to the Lord's work, to the poor and needy people. Our Lord takes note of them and blesses them in multi fold; even thousand fold of blessing for what you have given to the Lord. I am a witness for the Lord's thousand fold of blessings. Here is my testimony: After my wedding we wanted to buy a car because we had to travel a lot. But yet, we were not sure about our financial situations, so after many thoughts we did not want to take the financial risk and get stuck. As days passed by, chances of buying the car became very bleak because my wife quit her job in order to take care of the baby.

During a Sunday worship as I was observing the church, I felt the windows were looking empty. So it flashed in my mind to put curtains for the Church to make it look nicer. I was not willing to buy because of my financial crunch. Later, I decided to buy and bought it with much gladness. You wouldn't believe, within a week, I booked my car. It was priced exactly the 1000 times of what I had paid for the curtain. I was indecisive and had no resource to purchase a car. But the Lord made it. Give, it will come back to you in good measures. Luke 6: 38 says "*Give, and it will be given to you. A good measure, pressed down, shaken together and running over, will be poured into your lap. For with the measure you use, it will be measured to you.*" When a boy gave the two fishes and five loaves, it multiplied in many thousands and became a blessing to many. This year decide to give more to the Lord's works, poor, needy so that you may be blessed with over flowing and multiplying of blessings. Our Lord does not expect the offering from the stingy. But, He loves the cheerful givers.

Gospel was spread throughout India in the early missionary times by the cheerful offering of the ordinary people in Europe, US and other countries. I have heard that during those missionary days, some of the churches in England would not keep the money for even a day after the Sunday worship. They would send the money immediately to help the poor people in India to build Schools, Hospitals and other mission works. We shouldn't forget how we received the gospel into our homes. So doesn't hold back what belongs to the Lord and stop the flowing of God's blessing into your family.

It is the will of the Lord to bless us abundantly. If you believe in His mighty works and keep His words, then surely the Lord shall bless you to prosper abundantly by giving the land flowing with milk and honey. Through the overflowing blessings of the Lord, you shall be blessed and be a blessing to many. His days of blessing shall end your days of mourning. This New Year will be a new beginning for a multiplying and overflowing blessings of the Lord. "*The threshing floors will again be piled high with grain, and the presses will overflow with new wine and olive oil*" (Joel 2: 24). Say Amen!

Wish you a very Prosperous and overflowing New Year!

- Bro Densingh Joshua Israel

# என் வாழ்வில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறவில்லையே அப்படியானால் தீர்க்கதரிசனங்கள் உண்மையானவையா?

பொதுவாக வருட துவக்கங்களில் புதிய காரியங்களை துவங்கும்போது ஜெபத்தில் காத்திருக்கும்போது அநேக தீர்க்கதரிசனங்களை பெற்றுக்கொள்கிறோம். ஆதியிலே தேவன் படைப்பின் நாட்கள் முதல் பல காரியங்களை தீர்க்கதரிசனமாக நாம் தெரிந்து கொண்டவர்களுக்கு அறிவித்திருக்கிறார். அவைகள் அந்த காலக்கட்டங்களுக்கோ அல்லது எதிர்காலத்திற்காகவோ இருக்கிறது. ஒரு தனிமனிதனுக்கோ அல்லது ஒரு சமுதாயம் / தேசம் குறித்தோ தீர்க்கதரிசனங்கள் கூறப்படுகிறது.

❖ யோசேப்பு, இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் செல்வார்கள் என்பதை வெளிப்படுத்தினான்


❖ எலியா, எலிசா அரசர்களின் ஆட்சிகளைக் குறித்து எச்சரித்து பல தீர்க்கதரிசனங்களை உரைத்தனர்.

❖ ஏசாயா இயேசு கிறிஸ்துவைப் பற்றி முன்னறிவித்தார்.

❖ பவுல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்து கூறியுள்ளார்.

❖ யோவான் கடைசி காலங்கள் மற்றும் நித்திய வாழ்வு குறித்து எழுதியுள்ளார்.

இப்படி கடவுளிடமிருந்து வந்த தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் அப்படியே நிறைவேறியுள்ளதை நம் வேதத்தின் நிகழ்வுகளின் மூலம் அறிந்துகொள்ளலாம்.




ஆனால், சில நேரங்களில் தீர்ககதரிசனங்கள் நிறைவேறாமல் இருப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவதாக, தீர்க்கதரிசனங்கள் கடவுளிடமிருந்து வராமல், மனிதர்கள் தங்கள் எண்ணங்கள், அறிவு ஆகியவற்றை கொண்டு தங்களுடைய யோசனைகளை தீர்க்கதரிசனம் என்று கூறுகின்றனர். சிலர் பொதுவான உலகத்தில் நடக்கு காரியங்களை தீர்க்கதரிசனம் என்று கூறிவிட்டு, பின்பு அது நடந்து விட்டது என்று பெருமைபாராட்டுகின்றனர். இப்படி தவறாக உரைப்பவர்கள் சொல்வது அப்படியே நடப்பதில்லை. மேலும் சில காரியங்களில் அவர்கள் இல்லாமறபோய்விடுவார்கள். தேவனிடத்திலிருந்து வருகிற தீர்க்கதரிசனம் குறிப்பானதாக இருக்கிறது. அது அப்படியே நிறைவேறுகிறதுமாயிருக்கிறது. 'கனிகளினாலே அறிவீர்கள்' என்ற வசனம் கூறுகிறபடி பொய்யான தீர்க்கதரிசனங்கள் கடைசி காலங்களில் பல கள்ளதீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறபடியால் நாம் ஜாக்கிரதையாய் இருப்போமாக.

இரண்டாவதாக, நாம் தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்தும், கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் குறித்தும் சரியான புரிந்துகொள்ளுதல் இல்லாமையால் அவைகள் நிறைவேறவில்லையே என்று குழம்புகிறோம். இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்து சரியான அறிந்துகொள்ளுதல் இல்லாததால், இன்று வரை யூதர்கள் இயேசு மேசியாவாக வருவார் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேற காத்திருக்கின்றனர். நாமும்கூட கடவுளின் வார்த்தைகளைக் குறித்து சரியாய் அறிந்துகொள்ளவில்லையென்றால் தீர்க்கதரிசனங்களையும்,

தீர்க்கதரிசிகளையும் சந்தேகப்பட்டு குழம்பி நிற்கிறவர்களாக இருப்போம்.

கடவுளிடமிருந்து வந்த எந்த தீர்க்கதரிசனமும் நிறைவேறாமல் இருக்காது. கடவுளுக்கு பயந்து, அவர் சமூகத்தில் நீங்கள் உண்மையாய் காத்திருக்கும்போது, தம்முடைய உண்மையான தீர்க்கதரிசிகள் கூறும் அனைத்து தீர்க்கதரிசனங்களும் அப்படியே முழுவதுமாய் ஏற்றகாலத்தில் நிறைவேறும்.

ஆதி 50 : 24, 25
1 இராஜாக்கள்
2 இராஜாக்கள்
ஏசாயா 9, 11
1 தெச 4
வெளிப்படுத்தின விசேஷம்
மத்தேயு 7 : 15, 24 : 24
1 யோவான் 4 : 1
மத்தேயு 13 : 13 - 23

# பெலப்படுத்தும் தேவன்

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு பிலி 4:13**

கடந்த மாத தொடர்ச்சி.....

**புதுப்பெலன்:**

“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவானால் உன் பெலன் குறுகினது” நீதி 24:10

காட்டிலே வெள்ளம் ஓடி வருவதைப் பார்த்திருப்பீர்கள். அல்லவா! அந்த நீர் ஓர் சீராக தடையில்லாமல் ஓடுவதில்லை. சில இடங்களில் மேடு பள்ளங்கள் காணப்படுவதுண்டு. செடி கொடிகள் வேகத்தைத் தடுப்பதுமுண்டு. ஆனாலும், வெள்ளம் அங்கேயே நின்று விடுவதில்லை. நம்முடைய வாழ்க்கையும் அப்படிப்பட்டதுதான். குழந்தைப்பருவம் முதல் வாலிபப்பருவம் வரை நேரிடும் பிரச்சனைகளுக்கும் திருமணமான பின்பு வரும் பிரச்சனைகளுக்கும் வித்தியாசம் உண்டு. பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும். அதுதான் நமக்கு வரும் ஆபத்து. அந்தச் சமயத்தில் தேவ பெலனைப் பெற்று எதிர்நீச்சல் போடவேண்டும். சிலர் சோர்ந்து போவதினால் தான் அவசரப்பட்டு பல தீய முடிவுகளை எடுத்து நரக அக்கினிக்கு இரையாகி விடுகிறார்கள்.



“சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்” ஏசாயா 40:29.

நாம் சோர்ந்து போகாமல் இருந்தால் ஏற்ற காலத்தில் நல்ல பலனையும் பெலனையும் பெற்றுக்கொள்வோம்.

“கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்” ஏசாயா 40:31

ஆபத்துக்காலத்தில் கர்த்தருக்குக் காத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் கொடுக்கும் புதுபெலனை எதனோடும் ஒப்பிடமுடியாது. காண்டாமிருகத்துக்கு ஒத்த பெலனைக் கொடுப்பார் என்று வேதம் கூறுகிறது. கழுகு தன் வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு மலையின் உச்சிப்பகுதிக்குச் சென்று அமர்ந்து அமைதியாக இருக்குமாம். அப்போது அதன் செட்டைகளின் இறகுகள் உதிர்ந்து புதிய இறகுகள் அந்த கழுகுக்குப் புதிய பெலனைக் கொடுக்குமாம். அதனால் இன்னும் வேகமாகப் பறக்க ஆரம்பிக்குமாம். அதனைப் போல, நாமும் கர்த்தருக்குக் காத்திருந்த பின்பு பெற்றுக் கொள்ளும் பெலன் விசேஷித்ததாக இருக்கும். ஆகையால், துன்பகாலத்தில் அமர்ந்திருந்து தேவன் கொடுக்கும் புதுபெலனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நம்மை பெலவீனப்படுத்துவதே அவன் செயல். சீறிவரும் சிங்கத்தையும் சாத்தானையும் ஜெயிக்கும் பெலனைக் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார். சிம்சோன் என்பவனைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். சிம்சோனின் தாயாருக்குத் தூதன் தோன்றி நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. அவன் நசரேயனாயிருப்பான். அவன் தலையில் சவரகன் கத்தி படக்கூடாது என்றான். அவளும் அப்படியே கடைபிடித்து வந்தாள். அந்தப் பிள்ளை வளர்ந்தது. கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார் என்பதை வேதத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். தேவதூதன் சொன்னபடியே தாயானவள் நடந்து கொண்டதால் சிம்சோன் கர்த்தருடைய ஆவியைப் பெற்றவனாகக் காணப்பட்டான்.



சிம்சோன் பெலிஸ்தியரின் குமாரத்திகளில் ஒருத்தியைத் தனக்குப் பிரியமானவளாகக் கண்டு அவளை மணக்க விரும்பினான். அந்தக் காரியமாகத் தன் பெற்றாரோடு திம்னாத்துக்குச் சென்று கொண்டிருந்தான். வழியிலே எதிராக சிங்கம் ஒன்று வந்தது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினார். அதனால், தன் கையில் எந்த ஒரு ஆயுதமும் இல்லாதிருந்தும் அதை ஒரு ஆட்டுக்குட்டியைப் போல கிழித்துப்போட்டான். இந்தப் பெலன் எப்படி வந்தது?

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருக்கும் போது, நம்முடன் வாழ இடம் கொடுக்கும் போது பிசாசை எதிர்த்து அழிக்கும் பெலனை ஆவியானவர் நமக்குத் தருவார். மனோவாவின் மனைவியைப் போல நாமும் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தோமென்றால், நம்முடைய பிள்ளைகளையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்புவார். சிம்சோனைப் போல இந்த உலகத்தில் நமக்கு எதிராக வரும் சிங்கம் போன்ற பாவ இச்சைகளை மேற்கொள்ள தேவன் பெலன் கொடுப்பார்.

**பெலப்படுத்தும் வசனம்:-**

வேத வசனம் நமது கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சம் மட்டுமல்லாது ஆவியாயும் ஜீவனாயும் காணப்படுகிறது. ஜீவனில்லாதது போல் பெலனற்று காணப்படுகின்ற நமது சரீரத்தைப் பெலப்படுத்துகிறதாயுமிருக்கிறது. “அவர் தமது வசனத்தை அனுப்பி

அவர்களைக் குணமாக்கி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்" என்று சங்கீதம் 107:20-ல் பார்க்கலாம். ஒரு உண்மை சம்பவத்தைக் கூற விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சகோதரிக்கு முதுகில் பயங்கரமான வலியும் பெலவீனமும் இருந்தது. ஒவ்வொரு வாரமும் தவறாமல் ஆலயத்துக்குச் சென்று வருவார்கள். அங்கு எழுதப்பட்டிருக்கும் வசனங்களையும் படிப்பார்கள். தாங்கமுடியாத முதுகுவலியால் துக்கம் அதிகரித்தது. சரிவர வேலை செய்ய முடியவில்லை. சுறுசுறுப்பாக இருக்க முடியவில்லை. ஒரு நாள் ஆலயத்தில் சென்று அன்னாளைப் போலத் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தார்கள். ஜெபித்து முடித்த பின்பு தற்செயலாகத் தன் தலையைத் திருப்பி வாசல் பக்கம் பார்த்தார்கள். அங்கே ஒரு வசனம் அவர்களுடைய கண்களில் பட்டதாம்.

"ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்" லூக்கா 13:12

என்பதே அந்த வசனம் பல ஆண்டுகளாகப் பார்த்த, படித்த வசனம் தான் அது. ஆனாலும் அந்தக் குறிப்பிட்ட நாளில்தானே தன் இருதயத்தை ஊற்றிச் ஜெபித்ததினால் அந்த வசனம் மூலமாகக் கர்த்தர் பேசினார். அந்த நிமிஷத்தில்தானே பூரண விடுதலை பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

ஆகையால் நீங்களும் வேதத்தைத் திரும்ப வாசியுங்கள். வசனத்தின் மூலமாகத் தேவன் உங்களோடு பேசுவார். பெலவீனத்தை நீக்கி பெலத்தால் நிரப்புவார். உன் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும் என்ற வசனம் உங்கள் வாழ்க்கையிலும் செயல்பட ஆரம்பிக்கும்.

எனக்கு அன்பானவர்களே! நாம் துக்கப்பட்டு மடிந்து போக அல்ல; மகிழ்ச்சியோடு வாழவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் பெலனற்று சோர்ந்து போவதற்கு அல்ல; பெலவானாய் மாறி அவருக்காக எழுந்து பிரசகாசிக்கவே நம்மை அழைத்திருக்கிறார். இதை அறிந்தவர்களாக உபவாசித்துத் தேவபெலனைப் பெற்று ஓட்டத்தில் ஜெயமாக ஓட தேவன் உங்களுக்குக் கிருபை செய்வாராக! ஆமென்.

**- Sis. சுந்தரி**

# மருத்துவம்

1. செவ்வாழைப்பழம் இரவு சாப்பாட்டிற்கு பின் ஒரு செவ்வாழைப்பழம் சாப்பிட்டால் பல்வலி பல்ஈறு வீக்கம், பல்லீரல் ரத்த கசிவு எந்த நோயும் வராது.
2. பச்சை வாழைப்பழம் குளிர்ச்சியை கொடுக்கும்.
3. ரஸ்தாளி வாழைப்பழம் கண்ணிற்கும் உடல் வலிமைக்கும் மிக நல்லது.
4. நாவல்பழம் நீரிழிவை நீக்கும் வாய்ப்புண் வயிற்றறுப் புண்ணை நீக்கும் விந்துவை தட்டும்.
5. மஞ்சள் வாழைப்பழம் மலச்சிக்கலைப் போக்கும்
6. திராட்சை 1வது குழந்தைகளின் மணிக்கட்டு சளி காய்ச்சல் குணமாக திராட்சைப்பழங்களைப் பிழிந்து சாறெடுத்து ஒரு ஸ்பூன் அளவு எடுத்து தினம் 2 வேளை கொடுத்தால் இக்குறைபாடு நீங்கும்.
7. கற்பூர வாழைப்பழம் கண்ணிற்கு குளிர்ச்சி தரும்

# படைத்தவர் பாதுகாப்பார்.



அன்பான வாலிப சகோதர, சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புதுவருட அன்பின் வாழ்த்துக்கள். கடந்து போன வருடத்தில் நாம் கர்த்தரிடத்தில் பல நன்மைகளை பெற்றிருக்கலாம். இன்னும் சில நன்மைகளை இந்த புதிய வருடத்தில் பெற்றுக்கொள்வோம் என்ற விசுவாசத்தோடு எதிர்கொள்வோம். ஒருவேளை அவிசுவாசத்தோடு நிறைவேறாத காரியங்களோடு இந்த வருடத்தை எதிர்கொள்வீர்களானால் நீங்கள் சிந்திக்க ஒரு கேள்வியை வைக்க விரும்புகிறேன். உங்களை படைத்த தேவன் உங்களை பாதுகாக்கமாட்டாரோ? விசுவாசத்தோடு நிச்சயம் பாதுகாப்பார் என்று நீங்கள் சொன்னால் நலமாயிருக்கும்.

இந்த உலகத்தை, செடி கொடிகளை, மரங்களை, மிருகங்களை, மச்சங்களை படைத்த தேவன் அவைகளை அப்படியே விட்டுவிடவில்லை. எல்லாம் ஒழுங்காக செயல்படும்படியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்து இதுவரை அவைகளை குறைஏதுமின்றி பாதுகாக்கிறார். அப்படியாக படைக்கப்பட்ட மனுஷனை மட்டும் தேவன் கைவிடுவாரோ? அவைகளைக் காட்டிலும் மேன்மையான மனுஷனை, மேன்மையாக வைக்கமாட்டாரோ? நிச்சயமாக, தன்னிடத்தில் காத்திருக்கிற நம்மைப் போன்ற ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பார். “இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்” என்ற வசனத்தின் படி இந்த புதிய வருடத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

இதை நீங்கள் நன்கு புரிந்துகொள்ளும்படியாக சங்கீதம் 104-ஐ தியானித்தால் நலமாயிருக்கும் என எண்ணுகிறேன். இந்த சங்கீதம், நம்மை கருத்தோடு தன் சாயலாக படைத்த தேவன், நம்மை சிறப்பாக பாதுகாப்பார் என்பதை உறுதிசெய்கிறது. அவரை விசுவாசத்தோடு நாம் நோக்கிப்பார்க்கும்போது, அவரும் நம்மை நிறைவாக ஆசீர்வதித்து திருப்தியாக்குகிறார்.

# சங்கீதம் 104

1. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; நீர் மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்.
2. ஒளியை வஸ்திரமாகத் தரித்து, வானங்களைத் திரையைப்போல் விரித்திருக்கிறீர்.
3. தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின் மேல் செல்லுகிறார்.
4. தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழிக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்.
5. பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்.
6. அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது.
7. அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்து போயிற்று.
8. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது.
9. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்.
10. அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார்; அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது.
11. அவைகள் வெளியின் ஜீவன்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கும்; அங்கே காட்டுக்கழுதைகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்.
12. அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப்பறவைகள் சஞ்சரித்து, கிளைகள் மேலிருந்து பாடும்.
13. தம்முடைய மேல்வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார்; உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது.
14. பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார்.
15. மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்.
16. கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும்.
17. அங்கே குருவிகள் கூடுகட்டும்; தேவதாரு விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு
18. உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும், கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலம்.
19. சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்.
20. நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு

ஜீவன்களும் நடமாடும்.

21. பாலசிங்கங்கள் இரைக்காகக் கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும்.

22. சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும்.

23. அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான்.

24. கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.

25. பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு.

26. அதிலே கப்பல்கள் ஓடும்; அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கிலங்கள் உண்டு.

27. ஏற்றவேளையில் ஆகாரத்தைத்தருவீர் என்று அவைகளிலெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்.

28. நீர்கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும்; நீர் உம்முடைய கையைத் திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும்.

29. நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக் கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்.

30. நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.

31. கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும்; கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார்.

32. அவர் பூமியை நோக்கிப் பார்க்க, அது அதிரும்; அவர் பர்வங்களைத் தொட, அவைகள் புகையும்.

33. நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

34. நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.

35. பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, அல்லேலூயா.

இந்த சங்கீதத்தை திரும்ப, திரும்ப தியானிப்பீர்களானால், இதில் கொடுக்கப்பட்ட அநேக வாக்குறுதிகளும், நிகழ்வுகளும் நமக்கு உண்டு என்பதை அறிவீர்கள்.


- ❖ 23 - நல்ல வேலை வியாபாரத்தை கொடுப்பார்
- ❖ 14, 15 - கையின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார்
- ❖ 12 - சஞ்சரிக்க ஏற்ற இடம் கொடுப்பார்

❖ 3 - உணவை நிலைப்படுத்துவார்
❖ 13 - திருப்தியான வாழ்க்கை உண்டு
❖ 16, 17 - பிறருக்கு உதவுகிறவர்களாக வைப்பார்
❖ 24 - அநேக உபயோகமான பொருட்கள் தருவார்
❖ 26 - மகிழ்ந்து விளையாடும் தருணங்களை தருவார்
❖ 35 - எல்லா எதிரிகளையும் நீக்கிவிடுவார்
❖ 28 - நன்மைகளினால் திருப்தியாக்குவார்
❖ 9 - உங்கள் மூலமாய் அநேகர் ஆசீர்வதிக்கப்படுவார்
❖ 27 - கர்த்தரிடத்தில் காத்திருக்கும் அனுபவம் கிடைக்கும்
❖ 4 - ஆவியானவரின் அக்கினி அபிஷேகத்தோடு ஊழியக்காரராக்கிவிடுவார்
❖ 34 - கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பாய்
❖ 23 - கர்த்தர் உன்னைக் குறித்து மகிழ்வார், மகிமைப்படுவார், மகிமைப்படுத்துவார்.

இந்த புதிய வருடம் தேவன் உங்களுக்கு ஏற்கனவே திட்டம்போட்டு வைத்திருக்கிற மேன்மையான அனுபவங்களை நீங்கள் சுதந்தரிக்கும் வருடமாய் இருக்கும். தேவனை மட்டும் முழுவதுமாய் எல்லாவிதத்திலும் நம்புங்கள். அப்பொழுது உங்களை படைத்தவர், பாதுகாப்பார்.

நீர் உம்முடைய வாயைத் திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும்.

புதுவருட வாழ்த்துதல்களோடு
*சகோதரி. லிண்டா ராஜாசிங்*



# THE POWER OF BLESSING AND POWER OF POVERTY



Blessing is the power to live a successful life both spiritual and material in the will of God. In **Genesis 1: 26, 27, 28:- Ver26.** And God said, Let Us make man in our image, after our likeness: and let them have dominion over the fish of the sea, and over the fowl of the air and over the cattle, and over all the earth ,and over every creeping thing that creepeth upon the earth.

**Ver27**. So God created man in His OWN IMAGE, in THE IMAGE OF GOD created HE him; male and female created HE them.

**Ver28**. And God Blessed them, and God said unto them, BE FRUITFUL, AND MULTIPLY, AND REPLENISH THE EARTH, AND SUBDUE IT: AND HAVE DOMINION OVER THE FISH OF THE SEA, AND OVER THE FOWL OF THE AIR, AND OVER EVERY LIVING THING THAT MOVETH UPON THE EARTH.

How can they be fruitful, multiplying, replenishing and subduing and having dominion? With the blessing, before HE gave them the assignment HE gave them the blessing to do it, we read that God blessed them and God said:

They were empowered with the blessing! Blessing is the power to overcome everything; it's the blessing that strengthens us to walk in the will of God.

Salvation is a blessing from God, Jesus paid a heavy price on the cross to get it back to us! Apostle Paul says in (Romans 1:16) For I am not ashamed of the Gospel of Christ: (the blessing) it is the power of God unto everyone that believes.

When God created Adam and Eve HE empowered them with the blessing that they and their children will be fruitful and multiply, replenish in everything, we need to stop and read it slowly and loudly "**fruitful**"– means (productive or conducive to producing in Abundance, using all its vast resources in the service of God and man)

and "**multiply**" - means (increase in numbers or have offspring or combine or increase by multiplication)

and "**replenish**" - means (to fill something that had previously been emptied or refill)

and "**subdue**"–means (to bring under control)

and have "**dominion**" – means(power through legal authority or rule)

Just add all the list you are not fruitful according to his word, and in what all you are not multiplying according to Gods word there is a long list that which goes unnoticed in most of the Christian's life; not knowing that in, what God wants to be fruitful and in what God wants us to multiply, and replenish, subdue and to have dominion. But meagerly satisfied with the crumbs and also scared that too much might lead you to sin! Yeah it will if you are not parallel to be fruitful and multiplying in God and as well, being fruitful and multiplying materially; which will bring Glory to God.

When the world sees you fruitful and multiply; they want to know how you are so! When you are fruitful and multiplying you can serve God and man very effectively. When you are fruitful and multiplying in studying the word and knowing him more, than knowing about him more; having a prayer life which is fruitful and multiplying every day.

Just imagine what would be the power of that prayer: which is empowered with the blessing, the creative power in it, and the prophetic insight over time and over the destructive power of poverty of the devil. Imagine the fruitfulness and multiplication of our health, family our finance and all material things we need.

**Psalms 112:3** Wealth and riches *shall be* in his house: Why? Because of the power of blessing: fruitfulness and multiplication shall be in his house. I know when you are reading this you get text messages and images from the devil and drawings drawn on the screen of your mind, and voices from the devil that this is one of that prosperity messages;



because he wants Gods children to be in poverty and pain so he can steal, kill and destroy with the power of poverty, keep them in bondage, full of fear and doubt because of the destructive power of poverty from the devil, now you might say poverty has no power, well wait until you get a revelation !Poverty has the power to push you to the level of denying the Lord - question the Lord, and it can push you to deny the Lord. So how then can we prosper spiritually and materially??

We can by the power of Blessing that comes from the blessed word of God when we receive it by faith and obey. The power of blessing in you can make you a powerful vessel for Gods Glory to be revealed Just like Abraham we also can be a vessel /weapon in Gods hand; also to mention Solomon, David, and Jesus to crush the power of poverty.Jesus said I am anointed to preach the gospel to the poor, to bring them out of poverty who are under the power of poverty, and empower them with the power of blessing. If you are empowered with the blessing of God, devil will find some way materially to bring you under the power of poverty.

**(Proves 10:22)** The blessing of the Lord it Maketh rich and HE addeth no sorrow or pain with the Blessing but poverty will make you poor and add sorrow and pain every day with it. If we read that verse very attentively, He says that blessing of the Lord is what makes us rich, not the riches which make us blessed and then He says if you have the blessing of the Lord, then HE addeth no sorrow with it but if you have sorrow and pain added to your

riches then it's not the blessing of the Lord what you have but it's the riches of the world which you have gained by your strength and it needs to be santified. Blessing of the Lord is for a blessed person! Only a blessed person can handle the blessing others will mess it up, misuse and are afraid of the blessing and curse the blessing to reject it.

**Psalms 112:1,2** Blessed is the man— blessed is the man that feareth the Lord, that delighted greatly in his commandments,) that means a blessed man has the power to fear the Lord and he has the power to enjoy, rejoice in the word of the Lord .Now you might be thinking do we need power to rejoice?

Then God says through the psalmist in ver 2— His seed shall be mighty upon earth, the generation of the upright shall be blessed.

The word mighty is a strong word, it's not to be taken lightly, we should take it seriously. The word says “his seed” “that blessed mans seed” in other words his offspring's spiritual and physical will be empowered with the blessing and glorify God more than what the righteous blessed man did during his time being fruitful and multiplying. (In John 14:12 Jesus once said you will do greater things than I did because I go to my father.

Then God says “the Generation of the upright” that's one thing we should understand; that means the children of the righteous (one who is in right standing with the Lord) shall be blessed and they will overcome this world with the power of the blessing. God said through Apostle Paul in Galatians 3: 14 That the Blessing of Abraham might come on the gentiles through Jesus Christ that we might receive the promise of the Spirit through faith.

What is the blessing of Abraham? We need to really understand this through revelation! Then when the lights are switched on concerning the blessing and you start to be fruitful and multiplying.

What you should never do is… never curse the blessing or talk against the blessing or even say I don't need it! It's like for example you can't throw around your guitar and kick it here and there and expect it to be in fine tuning and sound good.

Also people criticize some of the ministries which minister deliverance, prophetic and at the same time cannot expect to be delivered from that Ministry, it is not going to work out. In same way never stand against blessing but rather believe in it! Receive it by faith! Study more and more about it. Just like we study other truths like salvation, blood of Jesus, The Holy Spirit, holiness, gifts and ministries in the bible.

In **Genesis 12:2** God said to Abraham “I will bless you with abundant increase and of favors and make your name famous and distinguished and you will be a blessing dispensing good to others” That's the Power of Blessing! Which God wants us to have in our life, so we could be fruitful and multiplying and which will bring Glory to His name. Hallelujah!

- Pastor Benedict

# சமையல்

# செட்டி நாட்டு சிக்கன் பிரியாணி

## தேவையான பொருட்கள்



| | |
|---|---|
| பாசுமதி அரிசி | 2கப் |
| கோழிகறி | 1/2 கி |
| இஞ்சி | 1 துண்டு |
| பூண்டு | 10 பற்கள் |
| வெங்காயம் பெரிது | 3 |
| தக்காளி | 3 |
| பச்சை மிளகாய் | 3 |
| தயிர் தேங்காய்ப்பால் தலா | 1/2 கப் |
| எலுமிச்சை | 1 |
| புதினா | 1/2 கட்டு |
| கொத்தமல்லி | 1/2 கட்டு |
| உப்பு | சிறிதளவு |
| கரம்மசாலா | 1/2 டிஸ்பூன் |
| மஞ்சள் தூள் | 1 டிஸ்பூன் |
| மிளகாய் தூள் | 1/2 டிஸ்பூன் |
| பட்டை | 3 |
| ஏலக்காய் | 3 |
| கிராம்பு | சிறிதளவு |
| பிரியாணி இலை | 2 |
| நெய் | 1 ஸ்பூன் |
| சமையல் எண்ணெய் | 3 ஸ்பூன் |

## செய்முறை :-

பாசுமதி அரிசியை ஊறவிடவும். கோழிக்கறியில் அரை ஸ்பூன் மஞ்சள் தூள் சேர்த்து சுத்தம் செய்துகொள்ளவும். கோழிக்கறியில் அரைகப் தயிர் மீதி மஞ்சள் தூள் உப்பு சேர்த்துக்கலந்து வைக்கவும்.

இஞ்சி பூண்டை நசுக்கி வைக்கவும். பச்சை மிளகாய், வெங்காயம், தக்காளி ஆகியவற்றை நறுக்கி வைக்கவும். குக்கரில் எண்ணெய் நெய் விட்டு காய்ந்ததும் பட்டை ஏலக்காய் கிராம்பு பிரியாணி இலையை போட்டு பொரிய விடவும். இஞ்சி பூண்டைபோட்டு பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். மிளகாய் வெங்காயம் இவைகளை போட்டு பொன்னிறமாகும் வரை வதக்கவும். அடுத்து தக்காளி புதினா இலைகளைச் சேர்த்து வதக்கவும். மஞ்சள் தூள் உப்பு ஆகியவற்றை போட்டு எண்ணெய் பிரியும் வரை வதக்கவும். தயிர் ஊறிக்கொண்டிருக்கும் கோழிக்கறியை மசாலா கலவையில் கொட்டவும். கறி வதங்கியதும் 1/2 கப் தண்ணீர் ஊற்றவும் மிதமான தீயில் கறி பாதி வெந்ததும் தேங்காய் பால் சேர்க்கவும். ஊற வைத்த அரிசியை கறிக்கலவையில் கொட்டி எலுமிச்சை சாறுவிட்டு 4 கப் தண்ணீர் சேர்த்து உப்பு சரியாக இருக்கிறதா என்று பார்த்து குக்கரை மூடவும்.

ஒரு விசில் வந்ததும் இறக்கி கொத்தமல்லி இலை தூவிப் பரிமாறவும்.

# சபையின் ஆராதனை ஒழுங்குகள்

# ஜனவரி-2018

| நாள் | கிழமை | ஜெபங்களும் நேரங்களும் |
|---|---|---|
| 1 | திங்கள் | **புது வருட ஆராதனை /இராபோஜ ஆராதனை** - ஆதிகாலை 12.00 முதல் 1.30 மணி வரை |
| | | ○ **பௌர்ணமி ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| | | **இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 2 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 3 | புதன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | **ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம்** - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 4 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 5 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 7 | ஞயாயிறு | **ஸ்தோத்திர பண்டிகை** - காலை 09.30 முதல 12.00 வரை |
| 9 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 10 | புதன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | **ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம்** - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 11 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 12 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 13 | சனி | **கிராம ஊழியம்** - காலை 10.00 மணி முதல் 2 மணி வரை |
| 14 | ஞயாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | **வாலிபர் கூட்டம்** - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை (சபையில்) |
| 15 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | **இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 16 | செவ்வாய் | ● **அமாவாசை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| 17 | புதன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | **ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம்** - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 18 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 19 | வெள்ளி | **உபவாச ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 20 | சனி | **உபவாச ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 21 | ஞாயிறு | **உபவாச ஜெபம் / ஓய்வுநாள் ஆராதனை / ஞானஸ்நானம் / இராபோஜனம்**<br>- காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| 23 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 24 | புதன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | **ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம்** - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 25 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 26 | வெள்ளி | **திருச்செந்தூரில் உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை<br>அப்போலோ கம்ப்யூட்டர் சென்டர், ஆதித்தனார் காலேஜ் எதிரில், வீரபாண்டிய பட்டிணம் ரோடு, திருச்செந்தூர். (Ph : 8903724440∴94445224760) |
| | | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 27 | சனி | **திருச்செந்தூரில் உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை<br>அப்போலோ கம்ப்யூட்டர் சென்டர், ஆதித்தனார் காலேஜ் எதிரில், வீரபாண்டிய பட்டிணம் ரோடு, திருச்செந்தூர். (Ph : 8903724440∴94445224760) |
| 28 | ஞயாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | **பெண்கள் ஐக்கியம்** - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை (சபையில்) |
| 29 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 30 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 31 | ஞயாயிறு | ○ **பௌர்ணமி ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| | | **இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |

# டிசம்பர் மாத ஊழியங்கள்












RNI No. TNTAM/2914/60710

# Happy New Year

# 2018

## GOD BLESS YOU WITH CHOICEST BLESSINGS!

**Athma Nesar Prayer Fellowship**

**Worship Timing - Sunday at 9.30 a.m.**

Address: 7/160, Agaram Main Road, Agaram Then, Chennai - 600 126.

Contact: +91 44 2229 4058 / 94440 30053 / 94440 30503

**Owned and Published by Rev. V. ISRAEL DEVADASAN**

Printed by : R. Venkatesan at ANBU OFFSET PRINTERS, No.22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501 and Published from No.2-106, Agaram Main Road, Agaram Then, Mappedu Post, Selaiyur, Chennai - 600 073

Editor: Rev. Israel Devadasan